**கவனிக்க** .- *2017.03.31 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* IV *(அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2014 - 2017 අප්‍රේල් මස 07 වැනි සිකුරාදා - 2017.04.07

*2014 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 714 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 725 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** (i) பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தம்) சட்டமூலம் 2017, மாச்சு மாதம் 24 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) வெளிநாட்டுச் செலாவணிச் சட்டமூலம் 2017, மாச்சு மாதம் 24 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2017, ஏப்பிறல் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பதவிகள் - வெற்றிடம்

## கடுகண்ணாவை நகர சபை

மத்திய மாகாண சபையில் கடுகண்ணாவை நகர சபையில் ஆரம்ப தரப் பதவி வெற்றிடங்களை நிரப்புதல்

கடுகண்ணாவ நகர சபையில் உள்ள பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்கான ஆட்சேர்ப்புக்கெனக் கீழே தரப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வி மற்றும் தொழிற் தகைமைகளைக் கொண்டுள்ள கடுகண்ணாவ நகர சபையின் நிருவாக எல்லைக்குள் நிரந்தர வதிவைக் கொண்டுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மத்திய மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் 2011.12. 23, 2009.07.29 ஆகிய திகதிகளில் அங்கீகரிக்கப்பட்ட மத்திய மாகாண அரச சேவையின் ஆரம்பத் தர தேர்ச்சியுள்ள, அரை தேர்ச்சியுள்ள, தேர்ச்சியற்ற பதவியணிகளுக்கான பிரமானசேவைக் குறிப்பின் கீழான ஆட்சேர்ப்பு

| பதவிப்பெயர் | வெற்றிட எண்ணிக்கை | சம்பளத்திட்டம் | கல்வித் தகைமைகளும் தொழிற் தகைமைகளும் |
|---|---|---|---|
| 01. மருந்துக் கலவையாளர் | 01 | சம்பளக் குறியீடு P. L. 02-2016 Grade III,<br><br>**சம்பள அளவுத்திட்டம்**<br>ரூபா 25,250-10×270-10× 300 - 10×330-12×350 - ரூபா 38,450<br><br>முதல் நியமனத் திகதியிலிருந்து பொ. நி. சு. 03/2016 II அட்டவணையின்படி ரூபா 14,818 அடிப்படைச் சம்பளத்தில் வைக்கப்பட்டு வேதனம் வழங்கப்படும் | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது தேசிய கல்விச் சான்றிதழ் சாதாரண தரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட ஆறு பாடங்களில் குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளுடன் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.<br><br>**தொழிற்தேர்ச்சிகளும்/திறமைகளும் :**<br>குறித்த தொழிலுக்கான தொழில்நுட்ப நியமன அதிகாரியினால் எதிர்பார்க்கப்படும் மட்டத்தை அடைந்திருத்தல் வேண்டும்.<br><br>(அ) தேசிய தொழில்சார் தகைமையின் தொழில் தொடர்பான 2 ஆவது மட்டம் (NVQ 2) அல்லது 3 ஆவது மட்டம் (NVQ 3) சான்றிதழ் பெற்றிருத்தல் ; அல்லது,<br><br>(ஆ) தேசிய தொழிற் பயிற்சித் திணைக்களத்தின் (DTET) தொழில் தொடர்பான ஒரு வருடத்துக்குக் குறையாத பாடநெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல்; அல்லது<br><br>(இ) தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் (NYSCO) தொழில் தொடர்பான ஒரு வருடத்துக்குக் குறையாத பாடநெறியைப் பயின்று சான்றிதழ் பெற்றிருத்தல்; அல்லது<br><br>(ஈ) இலங்கைத் தொழில் பயிற்சி அதிகார சபையில் (VTA) தொழில் தொடர்பான ஒரு வருடத்துக்குக் குறையாத பாடநெறியைப் பயின்று சான்றிதழ் பெற்றிருத்தல்; அல்லது<br><br>(உ) தேசிய தொழில் பயிலுநர் மற்றும் பயிற்சித் திணைக்களத்தில் (NAITA) ஒரு வருடத்துக்குக் குறையாத பாடநெறியைப் பயின்று சான்றிதழ் பெற்றிருத்தல் ; அல்லது |

| பதவிப்பெயர் | வெற்றிட எண்ணிக்கை | சம்பளத்திட்டம் | கல்வித் தகைமைகளும் தொழிற் தகைமைகளும் |
|---|---|---|---|
| | | | (ஊ) தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவுபெற்ற தொழிற்பயிற்சி நிறுவனமொன்றில் தொழில் தொடர்பான ஒரு வருடத்துக்குக் குறையாத பாடநெறியைப் பயின்று சான்றிதழ் பெற்றிருத்தல். <br><br> **அனுபவம்** <br><br> உரிய துறையில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். (பயிற்சிக் காலம் குறைந்தது 2 வருடங்களேனும் இருத்தல் வேண்டும்.) |
| 02. வேலை/ வெளிக்களத் தொழிலாளர் | 02 | சம்பளக் குறியீடு P. L. 01-2016 Grade III, <br><br> சம்பள அளவுத்திட்டம் ரூபா 24,250-10×250- 10× 270 - 10×300- 12× 330 - ரூபா 36,410 <br><br> முதல் நியமனத் திகதியிலிருந்து பொ. நி. சு. 03/2016 II அட்டவணையின்படி ரூபா 14,234 சம்பளப் படியில் வைக்கப்பட்டு வேதனம் வழங்கப்படும். | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட ஆறு பாடங்களில் குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளுடன் சித்தி அடைந்திருத்தல் வேண்டும். |
| 03. சுகாதாரத் தொழிலாளர் | 01 | சம்பளக் குறியீடு P. L. 01-2016 Grade III, <br><br> **சம்பள அளவுத்திட்டம்** ரூபா 24,250-10×250- 10× 270 - 10×300- 12× 330 - ரூபா 36,410 <br><br> முதல் நியமனத் திகதியிலிருந்து பொ. நி. சு. 03/2016 II அட்டவணையின்படி ரூபா 14,234 சம்பளப் படியில் வைக்கப்பட்டு வேதனம் வழங்கப்படும். | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட ஆறு பாடங்களில் குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளுடன் சித்தி அடைந்திருத்தல் வேண்டும். |

**3. சேவையில் அமர்துவதற்கான நிபந்தனைகள்:-**

3.1. இந்தப்பதவிகள் நிரந்தரமானவை. ஓய்வூதிய உரித்துடையவை;

3.2. விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும் ;

3.3. மூன்று வருட தகுதிகாண் சேவைக் காலத்துக்கு உட்படுதல் வேண்டும்;

3.4. இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கு மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவை நிபந்தனைகளுக்கும், நிதிப் பிரமாணங்களுக்கும். அரச திணைக்களங்களது கட்டளைகளுக்கும், மத்திய மாகாண சபை காலத்துக்குக் காலம் விதிக்கும் நிபந்தனைகளுக்கும் அமையச் செயற்படுதல் வேண்டும்.

4. **ஆட்சேர்ப்பு செய்வதற்கான பொது நிபந்தனைகள்**:-

1. விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும் ;

2. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் சிறந்த கண்பார்வையும், நல்ல தேகாரோக்கியத்தையும் சித்த சுவாதீனத்தையும், நன்னடத்தையையும் கொண்டவராக இருத்தல் வேண்டும். மேலும், தீவின் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றக்கூடிய பொருத்தமான உடற்தகைமையையும் கொண்டிருத்தல் வேண்டும் ;

3. விண்ணப்பதாரிகள் விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச அல்லது ஏதும் மாகாண அரச சேவையில் பதவி வகிப்போருக்கு இந்த உச்ச வயதெல்லை பொருந்தாது) ;

4. கடுகண்ணாவை நகர சபையில் தற்போது தற்காலிக/சமயோசித/பதிலீட்டு அடிப்படையில் பணியாற்றுவோருக்கு முன்உரிமை அளிக்கப்படும்;

5. விண்ணப்பதாரிகள் சிறந்த நன்னடத்தை உடையவராகவும் நல்ல தேகாரோக்கியம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்;

6. தகுதியானோர் முறையான நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலம் தகைமைகள் பரிசீலிக்கப்பட்டு ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்;

7. தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றத்தில் குற்றவாளியாகக் கருதப்பட்டவராகவோ தண்டிக்கப்பட்டவராகவோ இருத்தல் கூடாது;

8. இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் அல்லது கோரப்படும் காலத்தில் ஆட்சேர்ப்பைத் தாமதிக்கச் செய்யும், மாற்றியமைக்கும், அல்லது இரத்துச் செய்யும் அனைத்து அதிகாரமும் கடுகண்ணாவை நகர சபையின் செயலாளருக்கு உண்டு.

5. **விண்ணப்பிக்கவேண்டிய முறை**.- இந்த அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்துக்கு அமைய ஏ4 தாளின் இருபக்கங்களிலும் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2017, மே மாதம் 9 ஆந் திகதி செவ்வாய்க்கிழமையன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கும் வண்ணம் “செயலாளர், கடுகண்ணாவை நகர சபை, கடுகண்ணாவை” என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்களைக் கொண்டுள்ள கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். (ஏற்கனவே அரச சேவையில் பணிபுரிவோரது விண்ணப்பங்கள் அவர்களது திணைக்களத் தலைவரூடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.) உரிய திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

6. விண்ணப்பப் படிவத்துடன் பின்வரும் சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும். மூலச்சான்றிதழ்கள் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் :-

(1) பிறப்புச் சான்றிதழ் ;
(2) கல்விச் சான்றிதழ்கள் ;
(3) தேசிய ஆள் அடையாள அட்டையின் பிரதி ;
(4) வதிவிடத்தை உறுதிப்படுத்தும் பிரதேச செயலாளரது சான்றிதழ் ;
(5) அண்மையில் பெறப்பட்ட இரண்டு குணச் சான்றிதழ்கள் ;
(6) அனுபவம், தொழிற் தகைமைகள் பற்றிய சான்றிதழ்கள்.

டீ. எம். பீ. கே. திசாநாயக,
செயலாளர்,
கடுகண்ணாவை நகர சபை.

நகர சபை அலுவலகம்,
கடுகண்ணாவை,
2017, மார்ச்சு 16.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மத்திய மாகாண அரச சேவையில் கடுகண்ணாவை நகர சபையின் .......... பதவிக்கான விண்ணப்பம்**

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
2. முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் :----.
3. நிரந்தர முகவரி :----.
4. நிரந்தர வதிவிட மாவட்டம் :----.
5. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.
6. பிறந்த திகதி : வருடம் :---- மாதம் :---- திகதி :----.
7. விண்ணப்ப முடிவு திகதியில் உள்ளவாறான வயது :-
   வருடங்கள் :---- மாதங்கள் :---- நாட்கள் :----.
8. ஆண்/பெண் :----.
9. விவாகமானவர்/தனித்தவர் :----.
10. வம்சாவழியினாலா பதிவினாலா இலங்கைப் பிரசை :----.
11. கல்வித் தகைமைகள் :----.
12. ஏனைய தகைமைகள் :----.
13. ஏற்கனவே இந்த நகர சபையில் சேவையில் ஈடுபட்டுள்ளவரெனின்,
    (1) வகிக்கும் பதவி :----.
    (2) நிரந்தரம்/சமயோசிதம்/தற்காலிகம்/ பதிலீடு/ஒப்பந்தம் :----.
    (3) அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :-----.
14. ஏதேனும் குற்றம் ஒன்றுக்காக நீதிமன்றத்தால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா? :----.

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அனைத்தும் நான் அறிந்தவகையில் உண்மையானவை என உறுதிப்படுத்துகிறேன். மேற்குறித்த விபரங்கள் பொய்யானவை என நிரூபிக்கப்பட்டால் நியமனத்துக்கு முன்னர் தெரியவரின் நான் தகுதியற்றவனாக்கப்படுவேன் என்பதையும், நியமனத்தின் பின்னரெனின் நட்டஈடு எதுவுமின்றி பதவிநீக்கம் செய்வதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

-------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**அரச சேவையிலுள்ளோருக்கான திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

திரு./திருமதி/செல்வி ...................................... என்ற விண்ணப்பதாரி இந்த நிறுவனத்தில் ............................ ஆக பணியாற்றுகிறார். இநதப் பதவிக்காகத் தெரிவுசெய்யப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது. அவர் எவ்வகையிலான தண்டணைக்கும் உட்படவில்லை என்பதையும் உறுதிப்படுத்தி அவரது விண்ணப்பத்தைப் பரிந்துரை செய்கின்றேன்.

-------,
திணைக்களத் தலைவரது கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
நிறுவனம் :----.
திகதி :----.

4-07

## சிலாபம் பிரதேச சபை

வடமேல் மாகாண சபை அரச சேவையில் சிலாபம் பிரதேச சபையில் வெற்றிடமாகியுள்ள கீழ்க் காணப்படும் பதவிகளுக்கு தகுதியுள்ளவர்களை சேர்த்துக்கொள்வதற்காக சிலாபம் பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் நிரந்தரமாக வசிக்கின்றவர்களிடத்தில் இருந்து விண்ணப்பப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிட எண்ணிக்கை | சம்பளக் குறியீடு | சம்பளத் திட்டம் | கல்வி மற்றும் வேறு தகைமைகள் |
|---|---|---|---|---|---|
| 01 | பார வாகன இயக்குனர் | 01 | PL3-2016 | ரூ. 25,790-10×270 – 10× 300-10× 330 12× 350 - ரூபா 38,990 (இச்சம்பளம் உரித்தாவது 2020.01.01 ஆந் திகதி தொடக்கமாவதுடன் 3/2016 சுற்று நிருபத்தின் அட்டவணை II இன் ஒழுங்குகளுக்கமைய நியமனம் செயல்படுத்தப் படும் திகதி தொடக்கம் சம்பளம் வழங்கப்படும். | **வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு**<br>(அ) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது இரு பாடங்களுக்கு திறமைச் சித்தியுடன் 06 பாடங்களிலாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும். (விருப்பு பாடம் தவிர்த்து) குறைந்தபட்சம் ஒரே அமர்வில் 05 பாடமாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும்.)<br>**உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு**<br>(ஆ) தற்போது மாகாண சபை அரச சேவையில் உரிய நிறுவனத்தில் நிரந்தர சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள்அரசினால் அனுமதிக்கப் பட்ட பாடசாலையில் 8 ஆம் தரம் (9 ஆம் ஆண்டு) சித்தியடைந்திருத்தல்.<br>இந்த நடைமுறைகள் செயற்படும் திகதி தொடக்கம் ஆரம்ப தொழில்நுட்ப பதவிக்காக அமய, தற்காலிக, ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்துக் கொண்டுள்ள பணியாளர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட அடிப்படையில் அச்சந்தர்ப்பத்தில் காணப் பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையில் காணப்பட்ட கல்வித் தகைமைகள் இதற்கு உரித்தாகும்.<br>**தொழில்நுட்ப அறிவு/திறமை மற்றும் அனுபவம்**<br>பொதியில்லாத எடை 34 அந்தருக்கு மேற்பட்ட மோட்டார் முற்பகுதியும் பார ரேலர் மூலம் 32 பேருக்கு அதிகமான பயணிகளை கொண்டு செல்லக் கூடிய பஸ் வண்டியை செலுத்துவதற்கு மோட்டார் வாகன ஆணையாளரினால் வழங்கப்பட்ட தகுதி பற்றிய சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். (A வகுப்பு சாரதி அனுமதிப் பத்திரம்) மற்றும் இப்பதவிக்காக இருக்க வேண்டிய அனுபவமாக ஐ. ரி. ஏ. ரி. (I. T. A. T.) சான்றிதழ் பெற்றிருக்க வேண்டியதுடன் பார வாகன சாரதியாக 5 வருட அனுபவம் இருத்தல் வேண்டும். |

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிட எண்ணிக்கை | சம்பளக் குறியீடு | சம்பளத் திட்டம் | கல்வி மற்றும் வேறு தகைமைகள் |
|---|---|---|---|---|---|
| 02 | குழாய்க் கிணறு தொழில் நுட்ப வியலாளர் | 01 | PL2-2016 | ரூ. 25,250-10×270– 10× 300-10× 330 12× 350 - ரூபா 38,450 (இச்சம்பளம் உரித்தாவது 2020.01.01 ஆந் திகதி தொடக்கமாவதுடன் 3/2016 சுற்று நிருபத்தின் அட்டவணை II இன் ஒழுங்குகளுக்கமைய நியமனம் செயல்படுத்தப் படும் திகதி தொடக்கம் சம்பளம் வழங்கப்படும். | **வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு**<br>(அ) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரு பாடங்களிலாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும். (விருப்பு பாடம் தவிர்த்து)<br>**உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு**<br>(ஆ) தற்போது மாகாண சபை அரச சேவையில் உரிய நிறுவனத்தில் நிரந்தர சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் அரசினால் அனுமதிக்கப்பட்ட பாடசாலையில் 8 ஆம் தரம் (9 ஆம் ஆண்டு) சித்தியடைந்திருத்தல்.<br>இந்த நடைமுறைகள் செயற்படும் திகதி தொடக்கம் (2009.05.12) ஆரம்ப தொழில் நுட்ப பதவிக்காக அமய, தற்காலிக, ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்து கொண்டுள்ள பணியாளர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட அடிப்படையில் அச்சந்தர்ப் பத்தில் காணப்பட்ட ஆட்சேர்ப்பு நடை முறையில் காணப்பட்ட கல்வித் தகைமைகள் இதற்கு உரித்தாகும்.<br>**தொழில்நுட்ப அறிவு/திறமை மற்றும் அனுபவம்**<br>பதவியின் செயற்பாடுகளுக்கமைய தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள் கின்ற தொழில்நுட்ப/ தொழில் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற (N.V.Q. 2) அல்லது 3 மட்டத்தில் திறமைச் சான்றிதழ் பெற்றிருத்தல் மற்றும் ஏற்றுக்கொள்ளப்படும் நிறுவனம் ஒன்றினால் உரிய துறையில் 02 வருட அனுபவம் இருத்தல் வேண்டும். (சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும். |

2. மேற்குறிப்பிடப்பட்டுள்ள எல்லா பதவிகளும் வடமேல் மாகாணத்தின் கௌரவ ஆளுநர் அவர்களினால் அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறைகளுக்கமைய நிருவகிக்கப்படும்.

3. **வயது**.- விண்ணப்பம் ஏற்கப்படும் கடைசி திகதியன்று வயது 18 க்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். தற்போது மாகாண அரச சேவையில் நிரந்தரப் பதவியில் கடமைபுரியும் விண்ணப்பதாரிகளுக்கும், இப்பிரதேச சபையில் அமய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட சேவையாளர்களுக்கும் வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

**4. ஏனைய நிபந்தனைகள்:**

(i) எல்லா பதவிகளும் ஆட்சேர்ப்பு செய்துக் கொள்வதற்காக தாபனவிதிக் கோவையின் II ஆம் பந்தியின் 10 தொடக்கம் 12 வரையிலான பிரிவுகள் உரித்தாகும் ;
(ii) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(iii) விண்ணப்பப்பம் பொறுப்பேற்கும் கடைசித் திகதிக்கு 3 வருடங்களுக்கு குறையாத காலத்தினுள் சிலாபம் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் நிரந்தர வதியுநராக இருத்தல் வேண்டும் ;
(iv) நல்லொழுக்கமும் தேகாரோக்கியமுள்ளவராக இருத்தல் வேண்டும்;
(v) தண்டனைச் சட்டக் கோவையின்கீழ் நீதிமன்றத்தினால் குற்றவாளியாகி தண்டனை பெற்றவராக இருத்தலாகாது.

**5. நியமனத்தின் தன்மை :**

1. இப்பதவி நிரந்தரமானது. அரச அலுவலர்களுக்காக 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் தொடக்கம் செயற்படுத்துவதற்கு அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்படுகின்ற ஓய்வூதிய திட்டம் உங்களுக்கு உரித்துடையதாகும். 3 ஆண்டு காலத்திற்கு தகுதி காண் காலமாகும்.

6. பதவிக்காக விண்ணப்பிப்பதற்கு எதிர்பார்க்கின்ற விண்ணப்பதாரிகள் இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவப்படி ஒழுங்கமைக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை 2017.05.15 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்பு "செயலாளர், சிலாபம் பிரதேச சபை, சிலாபம்" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது நேரில் கொண்டு வந்துஒப்படைக்கலாம்.

7. ஒரு பதவிக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்பதாயின் அதற்காக வெவ்வேறாக விண்ணப்பப்படிவம் அனுப்ப வேண்டும்.

8. விண்ணப்பப்படிவத்துடன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்ப வேண்டியதுடன், நேர்முகப் பரீட்சையின் போது மூலப் பிரதியினை சமர்ப்பித்தல் வேண்டும் :-

(i) பிறப்பு சான்றிதழ் ;
(ii) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(iii) கல்விச் சான்றிதழ் ;
(iv) வதிவினை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ்;
(v) அண்மையில் பெற்றுக்கொண்ட நல்லொழுக்கம் பற்றிய சான்றிதழ் இரண்டு ;
(vi) தொழில் அனுபவம் மற்றும் வேறு தகைமைகள் அடங்கிய சான்றிதழ் ;
(vii) சேவை அனுபவம் பற்றிய சான்றிதழ்.

**ஆட்சேர்க்கும் முறை:**

அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கா அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சைக் குழுவின் பரிந்துரையின் கீழ் ஆட்சேர்ப்பு செய்துக் கொள்ளப்படும். தற்போது இப்பிரதேச சபையில் அமய, தற்காலிக, ஒப்பந்த அடிப்படையில் கடமை புரியும் விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பம் கோரப்பட்டதன் பின்பு அல்லது கோரப்படும் சந்தர்ப்பத்தில் இவ் ஆட்சேர்ப்பினை காலதாமதப்படுத்தல் அல்லது மாற்றம் செய்தல் அல்லது இவ் அறிவித்தலினை இரத்துச் செய்தல் அல்லது திருத்தம் செய்தல் என்பவற்றிற்கான பூரண அதிகாரம் சிலாபம் பிரதேச சபை செயலாளருக்குரித்தானதாகும்.

ஆர். ஜே. ஏ. எஸ். ஹேமலதா,
செயலாளர்,
சிலாபம் பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
சிலாபம்,
2017, மாச்சு 16.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சிலாபம் பிரதேச சபையில் ........... பதவிக்கான விண்ணப்பப்படிவம்**

1. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :----.
2. முகவரி :----.
3. தொலைபேசி இலக்கம் :----.
4. பிறந்த திகதி :----.
   ஆண்டு :----, மாதம் :----. திகதி :----.
5. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.
6. தேசிய இனம் :----.
7. திருமணமானவர்/திருமணமாகாதவர் :----.
8. 2017.05.15 ஆந் திகதிக்கு வயது :----.
   வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
9. நீங்கள் இலங்கைப் பிரசையா? அவ்வாறாயின் பரம்பரையாகவா? இல்லையாயின் பதிவு செய்யப்பட்டதனாலா என்பது பற்றி ? :----.
10. ஆண்/பெண் :----.
11. கல்வித் தகைமை (பிரதிகளை இணைத்தல் வேண்டும்) :----.
12. வேறு தகைமைகள் :----.
13. அனுபவம் :----.
14. பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் நிரந்தர குடியிருப்பிற்கான கால எல்லை :-.
    .......... தொடக்கம் ........... வரை
15. முன்பு சேவை புரிந்த இடம் :----.
16. ஏதாவதொரு குற்றச் செயலுக்கு எப்போதாவது நீதிமன்றத்தில் குற்றவாளியாகியிருப்பின் அக்குற்றமும் பெற்ற தண்டனை பற்றி விபரிக்கவும் :----.

இவ் விண்ணப்பப்படிவத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும், பிழையற்றதும் என்றும் உறுதிகூறுகின்றேன், என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானவை அல்லது பிழையானவை என்று பதவிக்கு தேர்ந்தெடுப்பதற்கு முன் தெரியவரின் நான் தகுதியற்றவர் என்றும், தேர்ந்தெடுக்கப்பட்ட பின் தெரியவரின் எவ்வித நட்டஈடும் இன்றி சேவையில் இருந்து விலக்க முடியும் என்றும் எனக்குத் தெரியும். விண்ணப்பப்பம் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு உடன்படுகின்றேன் என்று உறுதி கூறுகின்றேன்.

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் நிழற்படப் பிரதி இணைக்கப்பட்டுள்ளது.

1. பிறப்பு சான்றிதழ் ;
2. கல்விச் சான்றிதழ் ;
3. வேறு தகைமைகள் உள்ளடங்கும் சான்றிதழ்கள் ;
4. சேவை அனுபவம் பற்றிய சான்றிதழ்;
5. நிரந்தர குடியிருப்பினை உறுதிப்படுத்தும் சான்றிதழ் (கிராம அலுவலரின் சான்றிதழ்);
6. அண்மையில் பெற்றுக்கொண்டநற் சான்றிதழ்.

---------------------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி :----

**தற்போது சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :**

இந்த விண்ணப்பதாரியான .................................... திகதி தொடக்கம் இந்நிறுவனத்தில் .............................................. ஆக சேவை புரிவதாகவும், அவர் எவ்வித தண்டனைகளுக்கும் உள்ளாகவில்லை என்றும் சான்றுப்படுத்துகின்றேன்.

---------------------,
திணைக்கள/நிறுவனத் தலைவரின் அல்லது
அதிகாரமுள்ள அலுவலரின் கையொப்பம்

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
திணைக்களம்/நிறுவனம் :----.
(பதவி முத்திரையினை இடவும்)
திகதி :----.

*4-44*

---

**மத்துகம பிரதேச சபை**

மேல் மாகாண அரச சேவை வெற்றிடங்களுக்காக இணைத்துக் கொள்ளல்

மத்துகம பிரதேச சபையில் வெற்றிடமாகவுள்ள கீழ்க்காணும் பதவிகளுக்கு இணைத்துக்கொள்வதற்காக மேல் மாகாணத்தினுள் நிரந்தர வசிப்பிடமுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | பதவிப் பெயர் | வெற்றிடமாகவுள்ள பதவிகளின் எண்ணிக்கை | சம்பள முறை | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1 | காவலாளி (தேர்ச்சியற்ற) | 01 | PL-1 - 2006 ரூபா 24,250-250×10- 270× 10 - 300× 10- 330× 12- ரூபா 36,410 (முதல் நியமனத்தில் இருந்து 3 வருடங்கள் செல்ல முன்னர் முதலாவது வினைத்திறமைகாண் தடைதாண்டல் பரீட்சையில் சித்திபெறுதல் வேண்டும்.) | கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு குறைந்த பட்சம் இரண்டு திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். (இதில் 5 பாடங்கள் ஒரே அமர்வில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.) |
| 2 | சுகாதார தொழிலாளர் (தேர்ச்சியற்ற) | 01 | PL-1 - 2006 ரூபா 24,250-250×10- 270× 10 - 300× 10- 330× 12- ரூபா 36,410 (முதல் நியமனத்தில் இருந்து 3 வருடங்கள் செல்ல முன்னர் முதலாவது வினைத்திறமைகாண் தடைதாண்டல் பரீட்சையில் சித்திபெறுதல் வேண்டும்.) | 8 ஆம் தரம் (9 ஆம் ஆண்டு) சித்திபெற்றிருத்தல் வேண்டும். |

| | பதவிப் பெயர் | வெற்றிடமாகவுள்ள பதவிகளின் எண்ணிக்கை | சம்பள முறை | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 3 | கேட்போர்கூட பொறுப்பாளர் (தேர்ச்சியற்ற) | 01 | PL-1 - 2006 ரூபா 24,250-250×10-270× 10 - 300× 10-330× 12- ரூபா 36,410 (முதல் நியமனத்தில் இருந்து 3 வருடங்கள் செல்ல முன்னர் முதலாவது வினைத்திறமைகாண் தடைதாண்டல் பரீட்சையில் சித்திபெறுதல் வேண்டும்.) | கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு குறைந்த பட்சம் இரண்டு திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். (இதில் 5 பாடங்கள் ஒரே அமர்வில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.) |

2. **ஆட்சேர்ப்பு முறை:**

(i) நிறுவனத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்கும் பேணுவதற்கும் தேவையான பொதுவான அடிப்படைத் தேவைகளுள் குறித்த பகுதியளவு அல்லது தேர்ச்சி அறிவில்லாது நிறைவேற்றக்கூடிய அடிப்படை விடயங்கள் அடங்குகின்ற பல்வகை வேலை வகுதியொன்றாக இந்த சேவை வகுதி கருதப்படுகிறது. ஆகையினால் மேற்படி பதவிகளுக்குரிய வேலைகளுள் செயலாளரினால் ஒப்படைக்கப்படுகின்ற எந்தவொரு வேலையையும் செய்வதற்கு செயல் நடவடிக்கையில் சேவை வழங்கக் கூடிய விண்ணப்பதாரர்கள் தொடர்பாக முன்னுரிமை வழங்கப்படும்.

(ii) அடிப்படைத் தகைமைகளை பரிசோதிக்கும் நேர்முகப் பரீட்சையின்போது அடிப்படை கல்வித் தகைமைகளுக்கு மேலதிகமாக சர்வதேச மற்றும் தேசிய மட்டத்திலான நடப்புகள் பற்றிய பொதுவான அறிவு மற்றும் ஆளுமை கருத்தில் கொள்ளப்படுவதற்கான கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கும் விண்ணப்பதாரர்கள் தோற்ற வேண்டும் என்பதுடன் அதிக புள்ளிகள் பெற்ற ஒழுங்குமுறைக்கமைய இணைத்துக்கொள்ளப்படுவார்கள்.

3. **வயது**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது 18 வருடங்களுக்கு குறையாதும் 45 வருடங்களுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

4. **ஏனைய தகைமைகள்:**

(i) விண்ணப்பதாரி பரம்பரை அல்லது பதிவின் மூலம் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;
(ii) சிறந்த நன்னடத்தையுடையவராகவும் சிறந்த ஆரோக்கியமுடையவராகவும் இருத்தல் வேண்டும்;
(iii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அண்மித்த 3 வருடங்களுக்கு குறையாத காலம் விண்ணப்பதாரி மேல் மாகாணத்தினுள் நிரந்தர வசிப்பிடமுடையவராய் இருத்தல் வேண்டும். (வாக்காளர் பெயர்ப்பட்டியல் மூலம் அல்லது கிராம அலுவலர்/பிரதேச செயலாளரினால் வழங்கப்படும் சான்றிதழினால் வதிவிடத்தை நிரூபிக்க வேண்டும்.);
(iv) மத்துகம பிரதேச சபை அதிகார எல்லைக்குள் 3 வருடங்களுக்கு குறையாத காலம் நிரந்தர வதிவிடத்தை நிரூபிக்கின்ற ஏற்கனவே மத்துகம பிரதேச சபையில் அமைய பதிலீடு அல்லது ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றுகின்ற விண்ணப்பதாரர்கள் தொடர்பாக முன்னுரிமை வழங்கப்படும்;
(v) அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் நிறுவனத்தினால் சேவையில் இருந்து விலக்கப்பட்டவராக இருத்தல் கூடாது என்பதுடன் பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 44/90 இன் கீழ் ஓய்வூபெற்றவராக இருத்தல் கூடாது;
(vi) தண்டனைச்சட்டக் கோவையின் கீழ் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்ட ஒருவராக இருத்தலாகாது;
(vii) தேவைப்படுமானால் சபையினால் விதிக்கப்படுகின்ற பிணைப் பணத்தினாலோ, காப்புறுதிச் சான்றிதழ் மூலமோ பிணை வைப்பதற்கு தயாராக வேண்டும்;
(viii) பதவியில் இணைத்துக்கொள்வதற்கு தேவையான சகல தகைமைகளையும் வர்த்தமானியில் குறிப்பிடப்படும் திகதிக்கு முன் எல்லாவகையிலும் பூர்த்தியாகி இருத்தல் வேண்டும்.

5. **பொது நிபந்தனைகள் :-**

(i) பதவியில் கடமையாற்ற சிறந்த உடல், உள ஆரோக்கியமுடையவராகவும் சிறந்த ஆளுமைபடைத்தவராகவும் இருத்தல் வேண்டும் ;

(ii) இந்தப் நியமனம் நிரந்தரமானதும் ஓய்வூதியம் பெறக்கூடியதுமாகும் ;
(iii) மூன்று வருட தகுதிகாண் காலத்துக்கு உட்படும்;
(iv) தகுதிகாண் காலத்தின் இறுதியில் நிரந்தரமாக்குவதற்காக கவனத்தில் கொள்ளப்படும் ;
(v) இணைத்துக் கொள்ளப்பட்ட பின்னர் தங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட கல்வித்தகைமைகள் அல்லது வேறு தகைமைகள் போலியானது அல்லது உண்மையற்றது என தெரியவந்தால் வேறு எந்தவித அறிவித்தலுமின்றி நியமனம் இரத்துச் செய்யப்படும்.

6. **விண்ணப்பங்கள்.**-விண்ணப்பதாரிகள் கீழே தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2017.04.28 ஆந் திகதிக்கு முன்னர் "செயலாளர், பிரதேச சபை, மத்துகம" எனும் விலாசத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட வேண்டும். தாமதமாக கிடைக்கும் மற்றும் தபாலில் காணாமற் போகும் விண்ணப்பங்கள் தொடர்பாக பொறுப்புக்கூறப்படமாட்டாது.

7. தகைமைகள் உடைய விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள்.

8. விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் ஆவணங்களின் பிரதிகளை இணைத்து அனுப்ப வேண்டும் என்பதுடன் நேர்முகப் பரீட்சையின் போது மூல சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்–

(அ) பிறப்புச் சன்றிதழ் ;
(ஆ) கல்விச் சான்றிதழ்கள் ;
(இ) வதிவிடம் தொடர்பாக பிரதேச செயலாளரின் சான்றிதழ்/வாக்காளர் பெயர்ப் பட்டியலின் பிரதி;
(ஈ) அண்மையில் பெறப்பட்ட நற்குணச் சான்றிதழ்கள் இரண்டு (இதில் ஒன்று கிராம அலுவலரிடம் பெற்றதாக இருத்தல் வேண்டும்.)
(உ) தொழில்சார் அனுபவங்கள் பற்றிய சான்றிதழ்;
(ஊ) மத்துகம பிரதேச சபையில் ஏற்கனவே அமைய பதிலீடு அல்லது ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றும் பட்சத்தில் அதனை உறுதிப்படுத்துவதற்கான திணைக்களத் தலைவரினால் வழங்கப்பட்ட சான்றிதழ்.

9. இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னர் அல்லது கோரப்படுகின்ற வேளையில் இந்த ஆட்சேர்த்தலை தாமதப்படுத்தல் அல்லது மாற்றியமைத்தல் மற்றும் இவ்வறிவித்தலை இரத்துச் செய்தல் போன்ற சகல அதிகாரங்களும் மத்துகம பிரதேச சபையின் செயலாளருக்கு உண்டு.

10. இணைத்துக் கொள்ளும் திகதிக்கு ஏற்பட்டுள்ள சகல வெற்றிடங்களும் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதால் மேற்குறித்த பதவிகளின் எண்ணிக்கை மாற்றம் பெறுவதற்கு இடமுண்டு.

அசோக்க ரணசிங்க,
செயலாளர் மற்றும் மத்துகம பிரதேச சபையின்
அதிகாரங்களையும், கருமங்களையும்
நிறைவேற்றும் அலுவலர்.

2017, மாச்சு 23.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மத்துகம பிரதேச சபையில் ...................... பதவிக்கான விண்ணப்பம்**

1 விண்ணப்பதாரியின் பெயர் (முதலெழுத்துக்களுடன்) :-----.
முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர்கள் :-----.
2. தபால் விலாசம் :-----.
3. பிறந்த திகதி :-
வருடம் :----- மாதம் :----- திகதி :-----.
4. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது :-
வருடங்கள் :----- மாதங்கள் :----- நாட்கள் :-----.
5. திருமணமானவர்/திருமணமாகாதவர் :-----.

6. தேசிய இனம் :-----.
7. நீங்கள் இலங்கையரா? ஆம் என்றால் பரம்பரை மூலமா? பதிவின் மூலமா? என்பது பற்றி :-----.
8. கல்வித் தகைமைகள் :-----.
9. தொழில்சார் தகைமைகள் :-----.
10. நீங்கள் ஏற்கனவே இந்த பிரதேச சபையில் சேவை புரிகின்றவர் என்றால்,-
 (i) தற்பொழுது வகிக்கும் பதவி :-----.
 (ii) அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :-----.
 (iii) அந்த நியமனத்தின் தன்மை (அமய, தற்காலிக, பதிலீடு, ஒப்பந்த அடிப்படையிலா?) :-----.

இந்த விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும் பிழையற்றதும் என இத்தால் உறுதிகூறுகின்றேன். இதில் அடங்கும் தகவல்கள் ஏதேனும் உண்மையற்றது அல்லது பிழையானது என இந்தப் பதவிக்கு தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் நிரூபிக்கப்பட்டால் நான் தகுதியற்றவறாவேன் எனவும் நியமனம் பெற்ற பின்னர் நிரூபிக்கப்பட்டால் எந்தவித நட்டஈடும் இன்றி சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

4-134

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## வரக்காபொல பிரதேச சபை

### துணைவிதிகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 மற்றும் 126 ஆகிய பிரிவுகளின் மூலம் கிடைத்துள்ள அதிகாரங்களின் பிரகாரம் சப்பரகமுவ மாகாண சபையின் நிருவாக அதிகாரப் பிரதேசத்தின் வரக்காப்பொல பிரதேச சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள கீழ்க் குறிப்பிடப்பட்ட துணைவிதி பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சப்பிரகமுவ மாகாண சபையின் உள்ளூராட்சி விடயம் பொறுப்பான அமைச்சராகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டது என்பதை இத்தால் பிரகடனம் செய்யப்படுகின்றது.

மஹிபால ஹேரத்,
உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர்,
சபரகமுவ மாகாணம்.

2017, மாச்சு 15.

**விளையாட்டு மைதானங்களை உபயோகித்தல் பற்றிய துணை விதி - வரக்காபொல பிரதேச சபை**

1. இப்பகுதியின் துணை விதிகள் வரக்காபொல பிரதேச சபைக்கு சொந்தமான பொது விளையாட்டு மைதானங்களை ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணை விதிகளென எடுத்துக்காட்டப்படும்.

2. வரக்காபொல பிரதேச சபைக்குச் சொந்தமான ஏதேனும் விளையாட்டு மைதானத்தைப் பாவிப்பதற்கான அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்ளக் கருதியுள்ள எந்தவோர் ஆளும் இப்பகுதியின் துணை விதிகளின் முதலாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மாதிரிக்கமைய தயாரித்த விண்ணப்பப் பத்திரமொன்றைப் பூர்த்தி செய்து சமர்ப்பித்தல் வேண்டும்.

3. இரண்டாம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டவாறான விண்ணப்பப்பத்திரமொன்றைச் சமர்ப்பிக்கின்ற எவரேனும் ஆளுக்கு வரக்காபொல பிரதேச சபைக்குச் சொந்தமான ஏதேனும் விளையாட்டு மைதானமொன்றைப் பாவிப்பதற்கான அனுமதிப் பத்திரமொன்றை

விநியோகிக்கையில் இங்கு கீழே காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்திருந்தாலேயொழிய செயலாளரினால் அனுமதிப்பத்திரமொன்று விநியோகிக்கப்படலாகாது.

(அ) விளையாட்டு மைதானத்தைப் பாவனைக்கு எடுப்பதற்கான அனுமதிப்பத்திரமொன்றைக் கோருவதற்கான ஒவ்வொரு விண்ணப்பப் பத்திரமும் வரக்காபொல பிரதேச சபை அலுவலகத்திற்கு கிடைத்த வரிசைக் கிரமத்திற்கிணங்க பரிசீலனை செய்யப்படல் வேண்டும். இருந்த போதிலும் விளையாட்டு மைதானத்தைப் பாவனைக்கு எடுப்பதற்காக கிடைக்கின்ற விண்ணப்பப் பத்திரங்கள் மத்தியில் ஏதேனும் விளையாட்டு அல்லது விளையாட்டுடன் தொடர்புடைய ஏதேனும் விடயம் சம்பந்தமானதாக அமைகின்ற விண்ணப்பப் பத்திரத்திற்கு ஆகக்கூடிய முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்.

(ஆ) இத்துணை விதியில் இரண்டாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களைச் செலுத்தியதன் பின் பெற்றுக்கொள்ளப்பட்ட அனுமதிப்பத்திரமொன்று இருந்தாலன்றி விளையாட்டு மைதானத்தினை உபயோகிப்பதற்காக எவருக்கும் உரித்து இருத்தல் கூடாது.

(இ) இக்கட்டணங்கள் வரக்காபொல பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் விதிக்கப்படுகின்றவாறான கட்டணத் திருத்தங்களுக்கு உட்படுவதோடு இக்கட்டணத்திற்கு மேலதிகமாக அரசினால் காலத்திற்கு காலம் விதிக்கப்படுகின்ற வரிக்கட்டணங்களும் சேர்க்கப்பட்டு அறவிடப்படுதல் வேண்டும்.

4. பாவனைக்காக விளையாட்டு மைதானத்தை ஒதுக்கிக் கொள்ள விண்ணப்பப் பத்திரமொன்றைச் சமர்ப்பித்தலை, அத்தகைய ஒதுக்கிக்கொள்ளலை எதிர்பார்த்துள்ள திகதிக்கு குறைந்தபட்சம் மூன்று நாட்களுக்கு முன்னராக செய்துகொள்ளல் வேண்டும்.

5. இப்பகுதியின் துணை விதிகளிலான ஏற்பாடுகளின் கீழ் ஒதுக்கிக் கொள்ளப்பட்ட ஏதேனும் விளையாட்டு மைதானத்தில், அத்தகைய ஒதுக்கிக்கொள்ளலை இரத்துச் செய்வித்துக்கொள்ள ஏதேனும் விண்ணப்பதாரிக்கு வேண்டிய சந்தர்ப்பத்தில் கீழே குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டதாக அதற்காக அங்கீகாரம் வழங்குவதற்கு வரக்காபொல பிரதேச சபை தவிசாளருக்கு இடமளிக்க முடியும்.

(அ) ஒதுக்கிக்கொள்ளலை இரத்துச் செய்வதற்கான கோரிக்கை விடுக்கப்படுவது, விளையாட்டு மைதானம் ஒதுக்கப்பட்ட திகதிக்கு-

1. மூன்று மாதங்களுக்கு முன்னராயின், செலுத்திய கட்டணத்தில் நூற்றுக்கு ஐந்து
2. இரண்டு மாதங்களுக்கு முன்னராயின், செலுத்திய கட்டணத்தில் நூற்றுக்கு பத்து
3. ஒரு மாதத்திற்கு முன்னராயின், செலுத்திய கட்டணத்தில் நூற்றுக்கு பதினைந்து
4. பதினைந்து நாட்களுக்கு முன்னராயின், செலுத்திய கட்டணத்தில் நூற்றுக்கு இருபத்தைந்து
5. ஏழு நாட்களுக்கு முன்னராயின், செலுத்திய கட்டணத்தில் நூற்றுக்கு ஐம்பது
6. மூன்று நாட்களுக்கு முன்னராயின், செலுத்திய கட்டணத்தில் நூற்றுக்கு எழுபத்தைந்து

வீதத்தையும் பிரதேச சபை நிதியத்தில் பிடித்து வைக்கக் கட்டுப்படல் வேண்டும்.

(ஆ) ஒதுக்கிக் கொள்ளலை இரத்துச் செய்வதற்கான கோரிக்கை விடுக்கப்படுவது, விளையாட்டு மைதானம் ஒதுக்கிக் கொள்ளப்பட்ட திகதிக்கு மூன்று நாட்களை விடக் குறைவான காலப்பகுதியாயின் செலுத்திய கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது.

(இ) ஏதேனும் ஒதுக்கிக் கொள்ளல் இரத்துச் செய்துகொள்ளப்பட்டவிடத்து அத்தகைய ஒதுக்கிக் கொள்ளலுக்காக செலுத்தப்பட்ட வைப்புத் தொகையை முழுமையாகப் பெற்றுக்கொள்ள விண்ணப்பதாரிக்கு உரிமை உண்டு.

(ஈ) எவரேனும் ஆளொருவரால் ஒதுக்கிக் கொள்ளப்பட்ட விளையாட்டு மைதானம் ஒதுக்கிக் கொள்ளப்பட்ட கருமத்துக்காகவன்றி வேறு ஏதேனும் கருமத்திற்காக பாவிக்கப்படலாகாது.

(உ) விளையாட்டு மைதானமொன்றை ஒதுக்கிக் கொள்வதற்காக விநியோகிக்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தை எக்காரணத்தின் நிமித்தமும் பிறிதோர் ஆளுக்கு சாட்டுதல் செய்தலாகாது.

6. ஏதேனும் கருமத்திற்காக ஒதுக்கிக் கொள்ளப்பட்ட விளையாட்டு மைதானத்தின் அவ்வாறு ஒதுக்கிக்கொண்ட திகதிகளை மாற்றிக்கொள்ளத் தேவையாயின், விண்ணப்பதாரியால் அது பற்றிய எழுத்துமூலமான கோரிக்கையொன்றைத் தவிசாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய கோரிக்கைக்கிணங்க ஒதுக்கப்பட்ட திகதியை திருத்திக் கொள்ளலானது 3 மற்றும் 4 ஆவது துணைவிதிகளின் பணிப்புகளுக்குக் கட்டுப்பட்டதாக அமைதல் வேண்டும்.

7. இப்பிரிவில் துணை விதிகளில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு ஏற்ப விளையாட்டு மைதானமொன்றினை எவையேனும் ஒரு விடயத்திற்காக ஒதுக்கீடு செய்யாத ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் குறித்த விளையாட்டு மைதானத்தினை விளையாடுவதற்கு அல்லது விளையாட்டுப் பயிற்சி நடவடிக்கைகளுக்காக வழங்குவதற்கு தவிசாளருக்கு முடியும்.

8. விளையாட்டு மைதானமொன்றினை உபயோகிப்பதற்காக ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றிற்கு, அரச நிறுவனங்களின் எவையேனும் விழா நடவடிக்கைகளுக்காக மற்றும் தேசிய விழா ஒன்றிற்காக கட்டண அறவீடின்றி வழங்குவதற்கு பிரதேச சபை பொதுக்கூட்டத்தில் பிரேரணை அங்கீகாரம் மூலம் பெறப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக மேற்கொள்ளும் அதிகாரம் சபைத் தவிசாளருக்கு உள்ளது.

9. விளையாட்டு மைதானம் ஒதுக்கிக் கொள்ளப்பட்ட கால எல்லையை விட மேலதிகமாக ஈடுபடுத்தப்பட்ட காலப்பகுதிக்காக மூன்றாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கட்டணங்கள் அறவிடப்படும்.

10. எவரேனும் ஆளினால் வரக்காபொல பிரதேச சபைக்குச் சொந்தமான ஏதேனும் விளையாட்டு மைதானத்திற்கு சேதம் விளைவித்தலோ அவ்வாறு சேதமடைய இடமளித்தலோ ஆகாது. அத்துடன் விளையாட்டு மைதானத்திற்கு மாடுகள் போன்ற பிராணிகள் உள்ளே கொண்டு செல்லுதல் கூடாது. அத்துடன் தொடர்ந்தும், தவிசாளரிடம் பெறப்பட்ட அனுமதியின்றி எந்தவொரு வாகனத்தையும் எந்தவொரு மைதானத்திற்குள்ளும் செலுத்துதல் கூடாது.

11. இப்பகுதியின் துணைவிதியின் கீழ் ஒதுக்கிக்கொள்ளப்பட்ட ஏதேனும் விளையாட்டு மைதானம் அவ்வாறு ஒதுக்கிக் கொள்ளப்பட்ட தினத்தில் வரக்காபொல பிரதேச சபையின் ஏதேனும் அத்தியாவசியக் கருமத்திற்காக அவசியமாகுமிடத்து, அத்தகைய ஒதுக்கிக்கொள்ளலை இரத்துச் செய்ய தவிசாளர் அதிகாரமுடையவராக இருத்தல் வேண்டும். ஆயினும், அத்தகைய இரத்துச் செய்தல் மேற்கொள்ளப்படின் அத்தகைய இரத்துச் செய்தலானது விளையாட்டு மைதானம் ஒதுக்கிக்கொள்ளப்பட்ட தினத்திற்கு மூன்று நாட்களுக்கு முன்னராக விண்ணப்பதாரிக்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்படல் வேண்டுமென்பதோடு அவரால் செலுத்தப்பட்ட கட்டணமும் வைப்புத் தொகையும் முழுமையாகவே அவருக்கு மீளச் செலுத்தப்படல் வேண்டும். மேலும், அத்தகைய இரத்துச் செய்தலை ஒதுக்கிக்கொள்ளப்பட்ட திகதிக்கு முன்னர் மூன்று நாட்களை விடக் குறைவான காலப்பகுதிக்குள் செய்தலாகாது.

12. இத்துணைவிதியில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏதேனும் சட்டத்தினை மீறுதல் அல்லது செய்யாது விடுதல் குற்றமாவதுடன் எவரேனும் ஒருவர் தகுந்த அதிகாரமுள்ள நீதிமன்றமொன்றின் மூலம் குற்றத்திற்குக் குற்றவாளியாக்கப்பட்டதன் பின் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 (2) உப பிரிவின் மூலம் விதிக்கப்பட்டுள்ள தண்டத்திற்கு உட்படுவதோடு ஒரு முறை மீறியதன் பின் மீறலை தொடர்ந்தும் மேற்கொள்வாரெனின் குறித்த மீறல் விடயமாக கவனத்தில் கொண்டு பிரதேச சபையின் தவிசாளர் அல்லது செயலாளர் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் அலுவலர் ஒருவரினால் எழுத்துமூலமான அறிவித்தலொன்றை வழங்கியதன் பின்பும் குறித்த தவறினை தொடர்ந்தும் புரிகின்ற ஒவ்வொரு நாளுக்கும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 (2) பிரிவிற்கேற்ப விதிக்கப்பட்டுகின்ற மேலதிக தண்டத்திற்கு உற்படுதல் வேண்டும்.

13. இத்துணை விதியில் ஏதேனும் ஒரு மொழியில் பொருள் சம்பந்தமாக ஒவ்வாமை ஏற்படுமிடத்து இதன் சிங்களப் பிரதி அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் வலுவுடையதாய் இருத்தல் வேண்டும்.

14. இத்துணை விதியில்–

"பிரதேச சபை" என்பது, வரக்காபொல பிரதேச சபையையும்,
"தவிசாளர்" என்பது, வரக்காபொல பிரதேச சபைத் தவிசாளரையும்,
"செயலாளர்" என்பது, வரக்காபொல பிரதேச சபைச் செயலாளரையும்,
"அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்கள்" என்பது, தவிசாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட வரக்காபொல பிரதேச சபையின் ஒரு அலுவலரையும் குறிக்கும்.

15. பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள்கோடல் அவசியப்பட்டாலேயன்றி இப்பகுதியின் துணைவிதிகளில், "விளையாட்டு மைதானம்" என்பது, விளையாடுவதற்காக பிரதேச சபையினால், ஒதுக்கிக்கொடுக்கப்பட்ட ஏதேனும் விளையாட்டு மைதானம் எனக் கருதப்படுவதோடு விளையாட்டு மைதானத்தைச் சுற்றி நிர்மாணிக்கப்பட்டுள்ள மதில் அல்லது வேலி அல்லது அதற்குள்ளே நிர்மாணிக்கப்பட்டுள்ள ஏதெனும் கட்டிடம் அல்லது அத்தகைய ஏதேனும் நிர்மாணிப்பின் பகுதி அல்லது ஏதேனும் பொருத்தி அல்லது உபகரணமும் அதில் உள்ளடங்குதல் வேண்டும்.

விளையாட்டு என்பது 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுச் சட்டத்தில் அதற்கு வழங்கப்பட்டுள்ள கருத்தாகவே கருதப்படுதல் வேண்டும்.

**முதலாம் அட்டவணை**

*வரக்காபொல பிரதேச சபையின் ............. விளையாட்டு மைதானத்தை உபயோகிப்பதற்காக அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம்*

1. விண்ணப்பதாரியின் பெயர் :-----.
2. முகவரி :-----.
3. தொலைபேசி இல. :----.
4. தேசிய அடையாள அட்டை இல. :----.
5. விளையாட்டு மைதானத்தைக் கோருவதற்கான காரணம் :----.
6. தேவைப்படுகின்ற திகதியும் நேரமும் :----.

*மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகிறேன். இக்கோரிக்கைக்கிணங்க ........... விளையாட்டு மைதானம் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டால், அந்த விளையாட்டு மைதானத்தின் கட்டடங்களுக்கு, நிர்மாணிப்புகளுக்கு, உபகரணங்களுக்கு மற்றும் பொருத்திகளுக்கு ஏதேனும் சேதமேற்பட்டால் அந்த நட்டத்தை வைப்புத் தொகையிலிருந்து கழித்துக்கொள்ள உடன்படுவதோடு அத்தகைய வைப்புத் தொகை மேற்படி அறவிடலுக்குப் போதுமானதாக அமையாவிட்டால் மேலும் தேவையான பணத்தொகையை பிரதேச சபைக்குச் செலுத்தவும் உடன்படுகின்றேன். அத்துடன் விளையாட்டு மைதானத்தினை ஒழுங்குமுறைப்படுத்தல், கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வை செய்தல் பற்றிய துணைவிதிகளின் ஏற்பாடுகளைக் கடைப்பிடிக்கவும் உடன்படுகிறேன்.*

-----,
*விண்ணப்பதாரியின் கையொப்பம்,*

*திகதி :-----.*

**இரண்டாவது அட்டவணை**

*விளையாட்டு மைதானமொன்றை உபயோகிப்பதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு கட்டணங்கள் அறவிடப்படும்.*

| | | |
|---|---|---|
| 1. விளையாட்டு மைதானமொன்றினை ஒரு நாளைக்கு குத்தகைக்கு வழங்கும் கட்டணம் | - | 3,000 0 ரூபா |
| 2. வைப்புத் தொகை | - | 1,000 0 ரூபா |

*மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு விளையாட்டு மைதானங்களை ஒதுக்கிக் கொள்வதற்கான கட்டணம் மற்றும் வைப்புப் பணத்தைச் செலுத்தியதன் பின் மட்டும் அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்படும்.*

**மூன்றாவது அட்டவணை**

*ஏதேனும் ஒரு விடயத்திற்காக ஒதுக்கப்பட்ட விளையாட்டு மைதானமொன்றினை குறித்த விடயத்திற்காக உபயோகித்ததன் பின் வரகாபொல பிரதேச சபையில் வைப்பிலிடப்பட்ட வைப்புப் பணத்தில்,-*

1. *விளையாட்டு மைதானத்திற்கு உரித்தான அசையும் அல்லது அசையா சொத்துக்களுக்கு ஏதேனும் நட்டங்கள் ஏற்பட்டால், குறித்த நட்டதின் பெறுமதி மற்றும் ,*

2. *விளையாட்டு மைதானத்தினை ஒதுக்கீடு செய்த கால எல்லையை விட மேலதிகமாக உபயோகித்த காலத்திற்காக அறவீடு செய்து கொண்ட கட்டணம், என்பவற்றினைக் குறைத்ததன் பின் மீதியாகின்ற ஏதேனும் ஒரு தொகையை மாத்திரம் விண்ணப்பதாரருக்கு மீளச் செலுத்துதல் வேண்டும்.*

*4-05*

## குளியாபிட்டிய பிரதேச சபை

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி சபை (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதி) சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 9(3) ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி குளியாப்பிட்டிய பிரதேச சபையின் செயலாளர் மற்றும் அதிகாரம், செயல்கள், கடமைகளை நிறைவேற்றுகின்ற அலுவலராகிய நான் 2016.01.01 ஆந் திகதிய 1948 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் IV (ஆ) ஆம் உள்ளூராட்சி பகுதியில் பிரசித்தப்படுத்தப்பட்டுள்ள வீடு, சொத்து அபிவிருத்தி மற்றும் காணி துண்டிடப்பட்டு விற்பனை செய்வதற்குரிய துணை விதியினை ஏற்றுக்கொள்வதற்கான கருத்தினை கீழ் உள்ளவாறு சரிப்படுத்துவதற்கு 2017 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 14 ஆந் திகதிய 4870 ஆம் இலக்கத்தின் கீழ், கீழுள்ளவாறு தீர்மானம் எடுப்பதற்கு ஏற்பட்டது பற்றி இத்துடன் அறிவித்தல் விடுக்கின்றேன்.*

ஜே. ஏ. எஸ். ஜயசிங்ஹ,
செயலாளர் மற்றும் அதிகாரம் செயல்கள், கடமைகளை
நிறைவேற்றுகின்ற அலுவலர்,
குளியாப்பிட்டிய பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
குளியாப்பிட்டிய,
2017, மாச்சு 14.

### தீர்மானம்

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (முன்னுரை ஏற்பாடு) சட்டத்தின் 2 ஆம் பிரிவில் (1) வது உப பிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய (261 ஆம் அத்தியாயமான) 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கத்திற்கான உள்ளூராட்சி சபை (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதி) சட்டத்தில் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் வடமேல் மாகாணத்தில் உள்ளூராட்சி சபை விடயப் பொறுப்புடைய அமைச்சரினால் ஒழுங்கமைக்கப்பட்ட 2003.11.28 ஆந் திகதி மற்றும் 1317 ஆம் இலக்கத்திற்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் IV (ஆ) ஆம் உள்ளூராட்சி பகுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ள வடமேல் மாகாணத்தின் வீடு, சொத்து அபிவிருத்தி மற்றும் காணி துண்டிடப்பட்டு விற்பனை செய்வதற்குரிய துணை விதியினையும் உரிய வர்த்தமானி அறிவித்தலினை நீக்குவதோடு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் 2014.10.01 ஆந் திகதிய 1882/22 ஆம் இலக்கத்தினால் பிரசுரிக்கப்பட்டதும், வீடு, சொத்து அபிவிருத்தி மற்றும் காணி துண்டிடப்பட்டு விற்பனை செய்வதற்கு உரிய துணை விதியினை திருத்தம் செய்து பிரசுரிக்கப்பட்டுள்ளதும், 2015.08.28 ஆந் திகதிய 1929/45 ஆம் இலக்கத்தினால் பிரசுரிக்கப்பட்டுள்ளதும், வீடு, சொத்து அபிவிருத்தி மற்றும் காணி துண்டிடப்பட்டு விற்பனை செய்வது பற்றிய துணை விதிக்குரிய திருத்தம் 1952 ஆம் ஆண்டு 6 ஆம் இலக்க உள்ளூராட்சி சபை (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதி) சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் குளியாப்பிட்டிய பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்காக 2017.04.01 ஆந் திகதி தொடக்கம் செயற்பட வேண்டும் என்று 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 9 (3) ஆம் உப பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி இத்துடன் தீர்மானிக்கின்றேன்.*

4-06

---

## கொழும்பு மாநகர சபை

ஊன்வினைஞர் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 272)

*இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்களுக்கு முன்பாக காணப்படும் விபரங்களின் படி அந்தந்த விலாசங்களில் 2017 ஆம் ஆண்டு இறைச்சிக்கடைகள் நடாத்துவதற்கு இறைச்சிக்கடை அனுமதிப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன. இந்த அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு கொழும்பு நகரில் வசிக்கும் எந்த நபரிடம் இருந்தாவது எதிர்ப்பு தோன்றுமாயின் அவை எழுத்து மூலம் இரண்டு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு அறிவித்தலில் காணப்படும் திகதியிலிருந்தும் 14 நாட்களுக்குள் என்னை வந்து சேரும்*

வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும். ஊன்வினைஞர் கட்டளைச் சட்டத்தின் (272 ஆம் அத்தியாயம்) 07 (02) ஆவது பிரிவின்படி இவ்வறிவிப்பு விடுக்கப்படுகின்றது.

வீ. கே. ஏ. அனுர,
கொழும் மாநகர முதல்வர் மற்றும்
செயற்படுத்தும் அதிகாரம் பெற்ற அலுவலர்,
கொழும்பு மாநகர சபை.

நகர மண்டபம்,
கொழும்பு 07.
2017, மாச்சு 16.

**அட்டவணை**

**பிரத்தியேக இறைச்சிக்கடை**

***மாட்டிறைச்சிக் கடை***

| | பெயர் | விலாசம் |
|---|---|---|
| 1. | திரு. ஏ. எச். மொஹொமட் சீனி | இல. B/G/07, மிகிந்து மாவத்தை, கொழும்பு - 12. |

4-170

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2014 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரைப் பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2014 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| I வது பகுதி : | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.*** *- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

***அட்டவணை - 2017***

| *மாதம்* | | *வெளியீட்டு நாள்* | | | *அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும்* | | |
|---|---|---|---|---|---|---|---|
| ***ஏப்பிறல்*** | .. | வெள்ளி | 07.04.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.03.2017 |
| | | புதன் | 12.04.2017 | .. | நண்பகல் 12 | வியாழன் | 31.03.2017 |
| | | வெள்ளி | 21.04.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.04.2017 |
| | | வெள்ளி | 28.04.2017 | .. | நண்பகல் 12 | புதன் | 12.04.2017 |
| ***மே*** | .. | வெள்ளி | 05.05.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.04.2017 |
| | | வெள்ளி | 12.05.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.04.2017 |
| | | வெள்ளி | 19.05.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.05.2017 |
| | | வெள்ளி | 26.05.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.05.2017 |
| ***யூன்*** | .. | வெள்ளி | 02.06.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.05.2017 |
| | | வெள்ளி | 09.06.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.05.2017 |
| | | வெள்ளி | 16.06.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.06.2017 |
| | | வெள்ளி | 23.06.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.06.2017 |
| | | வெள்ளி | 30.06.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.06.2017 |

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*